முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1501

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.11.2023**, புதன்கிழமை

1. அறமெனும் சக்திமிகு அரங்கா
அன்னதான ஞானபலம் கொண்ட தேசிகா
வரம்தந்து மக்களை மீட்கவே
வையகத்தில் வாழுகின்ற ஞானதேசிகா
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 22ம் நாள், 08.11.2023, புதன்கிழமை)
ஆசிபட ஆறுமுகன் யான் உன்னுள்ளே
ஆற்றலாக இறங்கி அற்புதம் நடத்த
3. நடத்தவே ஓங்காரக்குடிலுக்கு
ஞானிகளின் பலமும் துணையும் பரிபூரணமாய் உண்டுஉண்டு
இடரேதும் வாராத வண்ணம் பாதுகாப்புத் தந்து எல்லாமுமாக
ஆறுமுகன் யான் காத்தருள்புரிய
4. புரியவே அரங்கனுக்கும் ஓங்காரக்குடிலுக்கும்
அரங்கன் குடில்சார்ந்திருக்கும் மக்கள்கள்
அனைவருக்கும் ஆற்றல்பட ஆறுமுகன்யான்
பாதுகாப்புத் தந்து அருள்புரிய
5. புரியவே அரங்கனின் ஞானம் அகிலத்தையே காக்கும்
வரமென அரங்கன் தருகின்ற தருமம் வையகத்தை
எல்லா இடரில் இருந்தும் மீட்டு காத்தருள்புரியும்
ஆகவே அரங்கன்வழி ஞானம்
6. அச்சமற மக்கள் தொடர்ந்து பயின்றுவர
யுகமாற்றம் நடக்கும் உலகோர்க்கு பாதுகாப்பாய் மாறும்
மிகைபட பெரும் தர்மவேலியிட்டு
மேலான பாதுகாப்பு ஆறுமுகன்யான் நடத்திவர

7. வருகவே பிரணவக் குடிலுக்கு
வல்லமைபட அரங்கன் தரும்
சன்மார்க்க ஞான வழிகளுக்கு அரசாங்கம் பிறவழி
அறிவிப்பேன் அதிகார வர்க்கங்கள் பிறவழி

8. இடர்பற்றாத பாதுகாப்புக் கூட்டி எல்லா வளமும் தந்தருள்புரிவேன்
புரியவே அரங்கன் ஞானம் பெருமைமிக்க ஆறுமுகன்என் ஞானமாகும்
ஞானம் பயில உலகோர்க்கு
ஞானசித்தி உறுதி உறுதி

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–